**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 , திருப்பத்தூர் மாவட்டம்</u>**

**<u>முன்னிலை</u> : திரு.S.கோவேந்தன், B.A., LL.B., (Hons).,**

நீதித்துறை நடுவர் எண்.2,

திருப்பத்தூர்.

2026–ம் ஆண்டு மே மாதம் 15–ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.294/2022</u>**

**CNR.NO. TNTU02-009888-2022**

அரசுக்காக காவல் ஆய்வாளர்,
கந்திலி காவல் நிலையம்,
திருப்பத்தூர்.
குற்ற எண்.112/2021 ......புகார்தாரர்

//எதிரிடை//

சுதாகர், த/பெ.குப்புசாமி .....குற்றஞ்சாட்டப்பட்டவர்

(குற்றம்சாட்டப்பட்டவர் வழக்கறிஞர் மூலம் வழக்கை எதிர்கொண்டார்)

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சி.சி. எண்.294/2022 |
| 2 | காவல் நிலையம் மற்றும் குற்ற எண் | கந்திலி காவல் நிலையம்,<br>குற்ற எண். 112/2021 |
| 3 | குற்றம் சாட்டப்பட்டது | இ.த.ச. பிரிவுகள் 279, 304(A) |
| 4 | குற்றம் முன்னிலைப்படுத்தப்பட்டது | இ.த.ச. பிரிவுகள் 279, 304(A) |
| குற்றம் சாட்டப்பட்டவரின் விவரம் | | |
| 5 | பெயர் மற்றும் தந்தை பெயர் | சுதாகர், த/பெ.குப்புசாமி |
| 6 | தொழில் | – |
| 7 | முகவரி | அம்மனூர் கிராமம்,<br>ஒடுக்கத்தூர், வேலூர். |



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

| | | |
|---|---|---|
| நாள் | | |
| 8 | குற்ற நிகழ்வு | 03.05.2021 |
| 9 | புகார் | 03.05.2021 |
| 10 | கைது செய்யப்பட்ட நாள் | 06.05.2021 |
| 11 | எதிரி பிணையில் வந்த நாள் | 06.05.2021 |
| 12 | வழக்கு துவங்கிய நாள் | 23.01.2023 |
| 13 | விசாரணை முடிக்கப்பட்ட நாள் | 12.05.2026 |
| 14 | தீர்ப்பு | விடுதலை |
| 15 | தாமதக் காரணம் | -- |
| வழக்கின் நிலை | | |
| 16 | பிணைக்காலம் | -- |
| 17 | குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | 26.08.2022 |
| 18 | கு.ந.மு.வி.பிரிவு 240-ன் கீழ் வினவல் | 08.11.2022 |
| 19 | பல்வகை மனுவின் மீது இந்நீதிமன்றத்தின் உத்திரவு | -- |

| 20 | முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை | அரசு தரப்பு சாட்சிகள் | முதல் விசாணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|---|---|
| | | அ.சா. 1 | 23.01.2023 | 23.01.2023 |
| | | அ.சா. 2 | 23.01.2023 | 23.01.2023 |
| | | அ.சா. 3 | 23.01.2023 | 23.01.2023 |
| | | அ.சா. 4 | 27.03.2023 | 27.03.2023 |



KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

| | | | | |
|---|---|---|---|---|
| | | அ.சா. 5 | 27.03.2023 | 27.03.2023 |
| | | அ.சா. 6 | 19.12.2023 | 06.04.2026 |
| | | அ.சா. 7 | 19.12.2023 | 06.04.2026 |
| | | அ.சா. 8 | 10.11.2025 | 26.03.2026 |
| 21 | பிரிவு 313 கு.வி.மு.ச (வினாவல்) | 13.11.2025 | | |
| 22 | தலைமறைவு எதிரியின் விவரங்கள்/ அவரது ஆஜர்/ஒப்படைப்பு | இல்லை | | |
| 23 | மேலமை நீதிமன்றங்களால் பிறப்பிக்கபட்ட நிறுத்திவைப்பு உத்தரவு ஏதேனும் | இல்லை | | |

இந்த வழக்கு 03.09.2022 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 12.05.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்ற முறையிடுபவர் தரப்பில் உதவி அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–II அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.நூஹு ஷாஹிப் அவர்களும் ஆஜராகியும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்தும், சான்றாவணங்களையும் சாட்சியங்களையும் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

**(1). குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:**

இவ்வழக்கில் கடந்த 03.05.2021–ம் தேதி 05.45 மணிக்கு கந்திலி காவல்நிலைய எல்லைக்குட்பட்ட திருப்பத்தூர் to கிருஷ்ணகிரி மெயின்ரோட்டில் மின் நகர், இந்தியன் மெட்ரிக் பள்ளி அருகில் இறந்த



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

அக்ஷயா என்பவர் TN 83 T 1282 என்ற எண் கொண்ட Hero Splendor Plus இருசக்கர வாகனத்தை ஓட்டிக்கொண்டு பின்னால் அவரது தங்கை நிஷா என்பவரை உட்கார வைத்துக்கொண்டு அவர்கள் தெருவில் இருந்து வந்து ரோட்டின் இடதுபக்கம் கந்திலியை நோக்கித் திரும்பியபோது, திருப்பத்தூர் பக்கமிருந்து வந்த AP 39 W 4527 என்ற அசோக் லைலேண்ட் லாரியை ஓட்டி வந்த ஓட்டுநரான எதிரி சுதாகர் என்பவர் லாரியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து அக்ஷயா மீது மோதி விபத்து ஏற்படுத்தியதில், அக்ஷயாவிற்கு தலையில் ஏற்பட்ட பலத்த இரத்தகாயத்தால் இறப்பு ஏற்படுத்தியதால் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 279, 304(A)–இன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**(2)** இறுதி அறிக்கையை இந்நீதிமன்றம் கோப்புக்கு எடுத்துக்கொண்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி ஆஜரானவுடன், குற்றச்சாட்டு வனையப்பட்டு, எதிரியிடம் வினவியபோது எதிரி அதை மறுத்ததால், அரசு தரப்பில் சாட்சிகளை முன்னிலைப்படுத்த இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது.

**(3)** குற்றம்சாட்டப்பட்ட நபருக்கு போதிய அவகாசம் கொடுத்தும், ஆவணங்களை பரிசீலித்தும், எதிரி மீதான குற்ற செயல்கள் விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்த காரணத்தினால் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 279, 304(A)–இன் கீழ் குற்றத்தின் சாராம்சத்தை விளக்கி கூற வினவியபோது, எதிரி குற்றத்தை மறுத்து உரைத்ததால் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

(4) அரசு தரப்பில் **அ.சா.1 மற்றும் அ.சா.8** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9** வரையிலான ஆவணங்களும், வழக்கிற்கு ஆதாரங்களாகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(5) அரசு தரப்பு சாட்சிகள் முடிவுற்ற பிறகு, சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு எதிராக உள்ள சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச.313(1)(b)–ன் கீழ் வினவியபோது எதிரி "பொய் சாட்சியம்" என்றும், அவர் தரப்பில் சாட்சிகள் உண்டு என்றும் கூறினார். ஆனால் போதிய காலஅவகாசம் கொடுத்தும் சாட்சிகளை முன்னிறுத்தவில்லை.

**அரசு தரப்பு சாட்சிகளின் மூலம் தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

(6) அ.சா.1 தண்டபாணி, திருப்பத்தூர் to கிருஷ்ணகிரி சாலையில் இந்தியன் மார்டன் பள்ளி அருகில் நடந்த விபத்தில் தனது மகள் அக்ஷயா இறந்துபோனது குறித்து, கடந்த 03.05.2021 அன்று கந்திலி காவல் நிலையம் ஆஜராகி, கொடுத்த (அ.சா.ஆ.1) புகாரைப் பெற்றுக்கொண்ட, அ.சா.8 காவல் ஆய்வாளர் திரு.சுரேஷ் (அ.சா.ஆ.4) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, தனது புலன் விசாரணையின் அடிப்படையில் எதிரி மீது இ.த.ச.பிரிவு.279, 304(A)–ன்கீழ் இறுதியறிக்கையைத் தயார் செய்துள்ளார்.

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்.**



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**<u>பொருண்மைகள் மற்றும் சாட்சியங்களின் மதிப்பீடு :</u>**

**(7)** அனைத்து சாலை விபத்துகளும் இந்திய தண்டனைச் சட்ட பிரிவுகள். 279 மற்றும் 304(A)–இன் கீழ் தண்டனைக்குரியது அல்ல. இரண்டு சட்டப்பிரிவுகளுக்கும் பொதுவான சாராம்சம் விபத்தானது எதிரியின் அதிவேகத்தாலோ அல்லது கவனமின்மையினாலோ ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதாகும்.

**<u>(8) இவ்வழக்கில் எதிரிக்கு எதிரான இ.த.ச.பிரிவு.279–ன் கீழான குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பரிசீலிக்கையில்,</u>**

*"The **essential ingredients** to constitute the offence under **Section 279 of IPC** are,*

*a) A person drives any vehicle. (any human being),*

*b) Such driving or riding is on any public way.*

*c) It is done in a manner so rash or negligent*

*i) as to endanger human life or,*

*ii) as to be likely to cause hurt or injury to any other persons"*

**<u>(9) எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள மற்றொரு குற்றச்சாட்டான இ.த.ச.பிரிவு 304–A குறித்து பரிசீலிக்கையில்,</u>**

*"The **essential ingredients** to constitute the offence under **Section 304(A) of IPC** are;*

*a) Death must have been caused by the accused.*

*b) Death caused by rash or negligent act.*

*c) Rash and negligent act must not amount to culpable homicide."*

**மேற்கண்ட சட்டப்பிரிவுகளின் சாராம்சங்களை கருத்தில் கொண்டு சாட்சியங்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றது.**



KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**<u>(10). மதிப்பீடு</u>**

**<u>எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை நிரூபிக்க வேண்டும் என்றால் அரசு தரப்பில் பின்வருவனவற்றை நிரூபித்திருக்க வேண்டும் :</u>**

i) எதிரிதான் சம்பவத்தின் போது விபத்தை ஏற்படுத்திய AP 39 W 4527 என்ற லாரியை ஓட்டி வந்தார்.

ii) எதிரியானவர் சம்பவத்தின் போது மேற்படி லாரியை அதிவேகமாகவோ அல்லது கவன குறைவாகவோ ஓட்டி வந்தார்.

iii) விபத்தில் இறந்த அக்ஷ்யா மேற்படி சாலை விபத்தினால் ஏற்பட்ட காயங்களினால் தான் இறந்தார்.

**<u>எதிரிதான் சம்பவத்தின் போது விபத்தை ஏற்படுத்திய AP 39 W 4527 என்ற பதிவெண் கொண்ட லாரியை ஓட்டி வந்தாரா?</u>**

**<u>அ.சா.1–ன் சாட்சியத்தை பரிசீலிக்கையில்,</u>**

**(11)** இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 தண்டபாணி தனது சாட்சியத்தில், சம்பவத்தின்போது விபத்தில் இறந்த தனது மகள் அக்ஷ்யா தனக்குச் சொந்தமான Splendor Plus இருசக்கர வாகனத்தில், தனது இரண்டாவது மகளை பின்னிருக்கையில் அமர்த்திக்கொண்டு திருப்பத்தூர் to கிருஷ்ணகிரி செல்லும் சாலையில் கசிநாய்க்கன்பட்டிக்கு நோட்டுப்புத்தகம் வாங்க சென்றபோது, மின்நகரிலிருந்து கந்திலி நோக்கி வந்த டாரஸ் லாரி, இந்தியன் மார்டன் பள்ளி அருகில் தனது மகள் அக்ஷ்யா ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின்மீது மோதி 10 அடி தூரம் இழுத்துச்சென்றதாகவும், தனது இரண்டாவது மகள் சாலையில் விழுந்து லேசான சிராய்ப்பு காயம் எற்பட்டதாகவும், அக்ஷ்யாவை லாரி இழுத்துச்சென்றதில், தலையில் கடுமையான காயம் ஏற்பட்டு சம்பவ



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

இடத்திலேயே இறந்துவிட்டதாகவும், ஆஜர் எதிரிதான் மேற்படி சம்பவ சமயத்தில் லாரியை ஓட்டி வந்த நபர் என்றும், இந்த விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அவரின் மூலமாக புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

இவரது சாட்சியத்தின் மூலம் (அ.சா.ஆ.1) புகாரானது நிரூபிக்கப்பட்டுள்ளது.

**அ.சா.6–ன் சாட்சியத்தை பரிசீலிக்கையில்,**

**(12)** அ.சா.6 திரு.மணிகண்டன் தனது சாட்சியத்தில் சம்பவத்தின்போது, விபத்தை ஏற்படுத்திய லாரியை ஓட்டி வந்த நபரை தான் பார்த்தேன். நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரி தான் விபத்தை ஏற்படுத்திய லாரியை ஓட்டி வந்தவர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**(13)** அ.சா.1 மற்றும் அ.சா.6–ன் சாட்சியங்களின் மூலம் எதிரிதான் மேற்படி விபத்து ஏற்படுத்திய நான்கு சக்கர வாகனத்தை ஓட்டி வந்தார் என்று அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

**எதிரியானவர் சம்பவத்தின் போது AP 39 W 4527 என்ற பதிவெண் கொண்ட லாரியை அதிவேகமாகவோ அல்லது கவன குறைவாகவோ ஓட்டி வந்தார்.**

(14). சம்பவத்தில் எதிரியின் ஈடுபாடு குறித்து அறிய கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.6–ன் சாட்சியங்கள் முக்கியத்துவம் பெறுகிறது.

**அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.6–ன் சாட்சியங்களைப் பரிசீலிக்கையில்,**

**(15).** அ.சா.1 திரு.தண்டபாணி தனது முதல் விசாரணையில், சம்பவத்தின்போது, எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் லாரியை



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

ஓட்டி வந்து தனது மகள் அக்ஷயா ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின்மீது, மோதி விபத்து ஏற்படுத்தியதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், தனது குறுக்கு விசாரணையில், சம்பவம் நடந்து சத்தம் கேட்டதால் சென்று பார்த்தேன் என்று முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

**(16).** அ.சா.2 திரு.ரமேஷ் தனது முதல் விசாரணையில், சம்பவத்தின்போது, அக்ஷயாவின் இருசக்கர வாகனத்தின் பின்னால், டாரஸ் லாரி வேகமாக மோதியதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், தனது குறுக்கு விசாரணையில், சத்தம் கேட்டுத்தான் சம்பவத்தை சென்று பார்த்ததாகக் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

**(17).** அ.சா.6 திரு.மணிகண்டன் தனது முதல் விசாரணையில், விபத்து நடந்து சத்தம் கேட்டதால் சென்று பார்த்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் குறித்து பரிசீலிக்கையில்,**

**(18).** விபத்திற்குள்ளான TN 83 T 1282 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில்,*"FRONT LEFT INDICATOR BROKEN, RIGHT HANDLE BAR DENTED, REAR TAIL LIGHT BROKEN"* என்றும், விபத்தை ஏற்படுத்திய AP 39 W 4527 என்ற பதிவெண் கொண்ட நான்கு சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில், *"LEFT LOAD BODY ANGLE MIRROR REAR LEFT LEFT WHEEL DENTED"* என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**(19)** மேற்படி மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விபத்துக்குள்ளான இரண்டு வாகனங்களின் சேதாரங்களைப் பரிசீலிக்கையில், எதிரியானவர் விபத்தில் இறந்த நபரின் வாகனத்தின் மீது, மோதியிருக்க வாய்ப்புள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

**(20)** இவ்வழக்கின் கேள்விப்பட்ட சாட்சியான அ.சா.3 திருமதி.கீதா, பிரேத விசாரணை சாட்சிகளான அ.சா.4 பன்னீர்செல்வம் மற்றும் அ.சா.5 சம்பத், பார்வை மகஜர் சாட்சியான அ.சா.7 விக்னேஷ் ஆகியோர் தங்களது குறுக்கு விசாரணையில், "சம்பவத்தைப் பற்றி நேரிடையாகத் தெரியாது" என்று சாட்சியம் அளித்துள்ளனர். இவர்களது சாட்சிங்களானது அரசு தரப்பு வழக்கிற்கு வலுசேர்க்கும் வகையில் அமையவில்லை.

**(21)** இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.8 காவல் ஆய்வாளர் திரு.சுரேஷ் தனது நீதிமன்ற சாட்சியத்தில், அ.சா.1 கடந்த 03.05.2021 அன்று கந்திலி காவல் நிலையம் ஆஜராகி கொடுத்த (அ.சா.ஆ.1) புகாரினைப் பெற்று, (அ.சா.ஆ.4) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, (அ.சா.ஆ.5) மாதிரி வரைபடம் தயார் செய்து, பிரேத விசாரணை சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து (அ.சா.ஆ.6) பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்து, இவ்வழக்கில் விபத்திற்குள்ளான வாகனங்களை மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தி (அ.சா.ஆ.7 & அ.சா.ஆ.8) மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்று, இவ்வழக்கில் இறந்துபோன நபரான அக்ஷ்யாவின் உடலை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு.பிரபாகரன் என்பவரை விசாரித்து (அ.சா.ஆ.9) பிரேத பரிசோதனை அறிக்கை தயார் செய்து, தனது புலன் விசாரணையை முடித்து சாட்சிகள் மற்றும் ஆவணங்களின்



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

அடிப்படையில், எதிரி மீது இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

**(22)** தனது குறுக்கு விசாரணையில், விபத்தில் இறந்த சிறுமிக்கு 15 வயது என்பதால் அவர் வாகனத்தை இயக்க தகுதியற்றவர் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**(23)** இவரது சாட்சியத்தின் மூலம், இவ்வழக்கு விபத்தில் இறந்த அக்ஷயா சம்பவத்தின்போது இருசக்கர வாகனத்தை இயக்குவதற்கு சட்டப்படி தகுதியற்ற 15 வயது சிறுமியாக இருந்துள்ளார் என்பது தெரியவருவதால், விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்ற சந்தேகம் எழுகிறது.

**(24)** அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.6–ன் சாட்சியங்களைப் பரிசீலிக்கும்போது, விபத்து நடந்து சத்தம்கேட்ட பிறகே இவர்கள் அங்கு சென்றுள்ளதால், விபத்திற்கு எதிரியின் அஜாக்கிரதையோ அல்லது கவனக்குறைவாவோதான் காரணம் என்பது இவர்களது சாட்சியத்தின் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை.

**<u>விபத்தில் இறந்த அக்ஷயா மேற்படி சாலை விபத்தினால் ஏற்பட்ட காயங்களினால் தான் இறந்தார்.</u>**

**(25)** இவ்வழக்கில் இறந்து போன சிறுமி அக்ஷயாவின் (அ.சா.ஆ.9) பிரேத பரிசோதனை அறிக்கையில், "The deceased should appear to have died of shock and hemorrhage due to head injury" என்று குறிப்பிட்டுள்ளதிலிருந்து, அக்ஷயா



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

இவ்விபத்தினால் தலையில் ஏற்பட்ட மேற்படி காயங்களினால் இறந்துள்ளார் என்று அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

**(26)** இவ்வழக்கின் சாட்சியங்களையும், ஆவணங்களையும் ஆராயும்போது, விபத்தை ஏற்படுத்திய லாரியை எதிரிதான் இயக்கினார் என்பதும், அரசு தரப்பு சாட்சிகளாலும், (அ.சா.ஆ.9) பிரேத பரிசோதனை அறிக்கை மூலமும் இவ்வழக்கு விபத்தினால் ஏற்பட்ட கடுமையான காயங்களினால்தான் சிறுமி அக்ஷயா இறந்துள்ளார் என்பதும் அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டபோதிலும், இவ்வழக்கில் இறந்துபோன சிறுமி அக்ஷயா இருசக்கர வாகனத்தை இயக்கத் தகுதியற்றவர் என்பதாலும், விபத்தானது யாருடைய அதிவேகத்தால் அல்லது கவனக்குறைவால் ஏற்பட்டது என்பதை போதிய சாட்சிகள் மூலம் அரசு தரப்பில் நிரூபிக்காததாலும், எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து இந்நீதிமன்றம் சந்தேகம் அடைகிறது.

அரசு தரப்பு வழக்கில் எழும் சந்தேகத்தின் பலன் எதிரியை சென்றடைய வேண்டும் என்பதே இயற்கை நீதி தத்துவமாகும்.

**<u>(27). முடிவு,</u>**

எனவே, இவ்வழக்கில் எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவு.279, 304(A)–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கபடாததால், எதிரியை மேற்படி பிரிவுகளின் குற்றவாளி இல்லை என்று தீர்ப்பளித்து, பிரிவு.255(1) of Cr.P.C–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு சொல்லச்சொல்ல, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு திருத்தங்களுக்குப் பிறகு 2026-ம் வருடம் மே மாதம் 15-ஆம் நாளான இன்று என்னால் அவையறியப் பகரப்பட்டது.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

நீதித்துறை நடுவர் எண்.2,
திருப்பத்தூர்.

<u>**அரசு தரப்பு சாட்சிகள் :**</u>

| **அரசு தரப்பு சாட்சிகள்** | **சாட்சியின் பெயர்** | **சாட்சியின் வகை** |
|---|---|---|
| **அ.சா.1** | திரு.தண்டபாணி, த/பெ.பழனி | புகார்தாரர் |
| **அ.சா.2** | திரு. ரமேஷ், த/பெ. வீராசாமி | கண்ணுற்ற சாட்சி |
| **அ.சா.3** | திருமதி.கீதா, க/பெ.தண்டபாணி | கேள்விப்பட்ட சாட்சி |
| **அ.சா.4** | திரு.பன்னீர்செல்வம், த/பெ.தங்கவேல் | பிரேத விசாரணை சாட்சி |
| **அ.சா.5** | திரு.சம்பத், த/பெ.தங்கவேல் | பிரேத விசாரணை சாட்சி |
| **அ.சா.6** | திரு.மணிகண்டன் த/பெ.லட்சுமணன் | பார்வை மகஜர் சாட்சி |
| **அ.சா.7** | திரு.விக்னேஷ், த/பெ.லட்சுமணன் | பார்வை மகஜர் சாட்சி |
| **அ.சா.8** | திரு.சுரேஷ் த/பெ.சின்னராஜ் | புலன் விசாரணை அதிகாரி |

<u>**அரசு தரப்பு சான்றாவணங்கள் :**</u>

| **சான்றாவண எண்.** | **சான்றாவணத்தின் வகை** | **சான்றளித்தவர்/ மெய்ப்பித்தவர்** |
|---|---|---|
| **அ.சா.ஆ.1** | புகார் | அ.சா.1 |
| **அ.சா.ஆ.2** | பார்வை மகஜர் | அ.சா.6 |

| | | |
|---|---|---|
| **அ.சா.ஆ.3** | பார்வை மகஜரில் உள்ள 2–வது கையொப்பம் | அ.சா.7 |
| **அ.சா.ஆ.4** | முதல் தகவல் அறிக்கை | அ.சா.8 |
| **அ.சா.ஆ.5** | மாதிரி வரைபடம் | அ.சா.8 |
| **அ.சா.ஆ.6** | பிரேத விசாரணை அறிக்கை | அ.சா.8 |
| **அ.சா.ஆ.7** | மோட்டார் வாகன ஆய்வறிக்கை (AP 39 W 4527) | அ.சா.8 |
| **அ.சா.ஆ.8** | மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 83 T 1282) | அ.சா.8 |
| **அ.சா.ஆ.9** | பிரேத பரிசோதனை அறிக்கை | அ.சா.8 |

**அரசு தரப்பு சான்று பொருள்கள் – இல்லை**

**எதிரி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை**

**எதிரி தரப்பு சான்று பொருள் – இல்லை**

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

நீதித்துறை நடுவர் எண்.2,
திருப்பத்தூர்.

**பின்குறிப்பு**

1. எந்த சாட்சியும் 3 கேட்புரைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. விசாரணை சமயம் எதிரி பிணையில் இருந்தார்.
3. வழக்கு முடிவு குறித்து சம்பந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
4. இவ்வழக்கில் வழக்குச்சொத்துக்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

//உண்மை நகல்//

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

நீதித்துறை நடுவர் எண்.2,
திருப்பத்தூர்.